

நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆலந்தூர் தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் தா.மோ. அன்பரசன் ஆலந்தூர் தெற்கு பகுதி, 163, 165வது வட்டத்தில் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகளுக்கும் இயக்கத் தோழர்களுக்கும் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். அருகில் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என். சந்திரன், பகுதிச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் கே.ஆர். ஜெகதீஸ்வரன், வேலவன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் தொடர்வோம்! தமிழ்நாட்டின் நலன் கருதி

# புதிய அரசுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நிபந்தனையற்ற ஆதரவு!

## உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்! பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அறிவிப்பு!

சென்னை, மே 11-

தி.மு.க. தலைமையிலான நீண்ட காலக் கூட்டணியில் தொடர்வோம் எனவும், தமிழ்நாட்டின் நலன் கருதி புதிய அரசுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நிபந்தனையற்ற ஆதரவை அளிப்பதாகவும் உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அக்கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உயர்நிலைக் குழு தீர்மானம் வருமாறு:-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில உயர் நிலைக்குழு கூட்டம் 09.05.2026 மாலை 4 மணிக்கு தலைமை நிலையம் காயிதே மில்லத் மன்ஜில், சென்னை - 1 என்ற முகவரியில் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



### தி.மு.க. தலைமையில் வென்ற உறுப்பினர்கள்!

தமிழகத்தில் 2026 ஏப்ரல் 23இல் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்று, திமுக மற்றும் தோழமை இயக்கங்களின் பெரும் ஆதரவுடன் வாணியம்பாடி, பாபநாசம் ஆகிய இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்று, முறையே எஸ்.எஸ். பி.சையத் பாரூக் பாஷா மற்றும் ஏ.எம்.ஷாஜகான் ஆகிய இருவரும் சட்டமன்ற உறுப்பினர்களாகி இருக்கிறார்கள்.

ஜனநாயக தேர்தல் முடிவுகள் தமிழக வெற்றி கழகத்திற்கு 108 தொகுதிகளில் மட்டும் வெற்றியை தந்திருக்கிற நிலையில், தமிழகத்தில் அரசு அமைப்பதில் சுணக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் அரசு அமைப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கி றார்கள்.

### ஜனநாயகக் கடமை!

தமிழக வெற்றிக் கழகம் தமிழ்நாட்டில் அரசு அமைப்பதற்கு திமுக கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் அரசியல் இயக்கங்கள் தங்களின் ஆதரவை தெரிவித்து வருகின்றன. தமிழ்நாட்டில் அரசு அமைப்பதற்கு இன்னும் இரண்டு சட்டமன்ற தொகுதிகளின் உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளதால் தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இரண்டு உறுப்பினர்களின் ஆதரவை வேண்டி தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் அவர்களின் கடிதம் இந்திய யூனியன் முஸ்லிம் லீகிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் ஜனநாயக முறையிலான அரசு அமைப்பதற்கு உதவ வேண்டிய கட்டாயம் ஜனநாயக கடமையாக இருக்கிறது. இந்த ஜனநாயக கடமையை செய்வதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்த மாநில அவசர உயர்நிலை குழு முடிவு செய்கிறது.

தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் நிபந்தனையற்ற ஆதரவளித்து எல்லா வகையிலும் ஒத்துழைத்து துணைபுரிவர் என்பதை இக்கூட்டம் தெரிவிக்கிறது. தமிழக வெகுஜன மக்கள் குறிப்பாக முஸ்லிம் சமுதாயத்தின் உணர்வும் எதிர்பார்ப்பும் ஜனநாயக முறையிலான அரசு உருவாக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி என்பது வரவேற்புக்கு உரியது அல்ல என்பதையும் ஜனநாயக அரசு உருவாக்குவதை தவிர்த்தால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டு விடும் என்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உயர் நிலை குழு கருதுகிறது.

### பாரம்பரியத்தை பேணிக்காப்போம்!

தமிழகத்தின் பாரம்பரியத்தை பேணிக் காப்பதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்த முடிவு எடுத்து அறிவிக்கிறது. தமிழக அரசியலில் நீண்ட காலமாக திமுக தலைமையிலான கூட்டணியில் இருந்து வரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அதே நிலையில் தொடரும். தமிழகத்தில் ஜனநாயக முறையிலான ஆட்சி உருவாவதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில உயர்நிலை குழு இந்த தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது.

இவ்வாறு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் துணைத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

---

## தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி வந்துவிடக்கூடாது என்பதாலேயே

# த.வெ.க.வுக்கு விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவு!

## கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் விளக்கம்!

சென்னை, மே 11

த.வெ.க.வுக்கு ஆதரவளித்தது பற்றி வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைக்க வி.சி.க. நேற்று ஆதரவு கடிதம் அளித்துள்ளது. அதில், "தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றிபெற்றும் ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில்' விசிக 8 தொகுதிகளில் போட்டியிட்டு 2ல் வெற்றி பெற்றது. அதேபோல, இடதுசாரிகளும் தலா 2 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.



மக்கள் நல கூட்டணி உருவான காலத்திலிருந்து கொள்கை அடிப்படையில் இடதுசாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறோம். மக்கள் பிரச்னையில் ஒருங்கிணைந்து களமாடியிருக்கிறோம். ஆகவே, இந்த அரசியல் நெருக்கடி உருவாகியிருக்கும் சூழலில் நாங்கள் தொலைநோக்கு பார்வையோடு எதிர்கால அரசியலையும் கருத்தில் கொண்டு அதனடிப்படையில் கலந்து பேசி முடிவெடுத்துள்ளோம்.

கம்யூனிஸ்ட் கட்சிகள் மாநிலக் குழுவைக் கூட்டி தவெகவுக்கு ஆதரவைத் தெரிவித்திருந்தனர். அதனைத் தொடர்ந்து, வி.சி.க. உயர்நிலைக் குழு கூட்டப்பட்டு நிர்வாகிகளுடன் கலந்துரையாடப்பட்ட நிலையில், நிறைவாக கட்சியின் தலைவர் இறுதி முடிவை மேற்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் இந்த அரசியல் சூழ்நிலையைக் காரணம் காட்டி குடியரசுத் தலைவர் ஆட்சி இங்கு வரக்கூடாது. இந்த நிலையில், த.வெ.க. தலைவர் விஜய் ஆட்சியமைக்க ஆதரவளிக்க வி.சி.க. முடிவெடுத்தது. குடியரசுத் தலைவர் ஆட்சி இங்கு வந்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலும், 108 இடங்களில் வெற்றிபெற்றும் தவெக ஆட்சியமைக்க முடியாமல் திணறிக்கொண்டி ருக்கக்கூடிய நிலையில் அவர்கள் ஆட்சியமைக்க வி.சி.க. ஆதரவளிக்க வேண்டும் என்கிற அடிப்படையிலும் இந்த ஆதரவு நிலைப்பாட்டை நாங்கள் எடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் தவெகவுக்கு ஆதரவு கடிதத்தை வழங்கியுள்ளோம்.

இதுவே, எங்கள் இறுதி நிலைப்பாடு. இடதுசாரிகளின் நிலைப்பாட்டை ஒட்டியே நாங்கள் முடிவெடுப்போம் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம். அதேபோல, நாங்கள் தவெகவுக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்க முடிவெடுத்துள்ளோம்." என்று தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

---

## பிளஸ் 2 பொதுத்தேர்வு!

# சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 92.96 சதவீதம் தேர்ச்சி!

சென்னை, மே 11 –

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பிளஸ் 2 பொதுத்தேர்வு எழுதிய மாணவ, மாணவியரில், 92.96 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்று, சாதனை படைத்துள்ளனர்.

இது, கடந்தாண்டு தேர்ச்சி விகிதமான, 88.12 சதவீதத்தை விட, 4.84 சதவீதம் கூடுதல். மாநகராட்சி பள்ளி அளவில், சலவை தொழிலாளி மகள் 593 மதிப்பெண்களுடன் முதலிடம் பெற்று அசத்தியுள்ளார்.

சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் 400க்கும் மேற்பட்ட பள்ளிகள் உள்ளன. இதில், 281 பள்ளி களைச் சேர்ந்த 2,257 மாணவர்கள், 2,922 மாணவியர் என, மொத்தம் 5,179 பேர், கடந்த மார்ச் 2 முதல் 26ம் தேதி வரை, அரசு பொதுத்தேர்வு எழுதினர். தேர்வு முடிவு, நேற்று முன்தினம் வெளியானது. இதில், மாநகராட்சி பள்ளிகளில் தேர்வு எழுதிய மாணவர்கள் 2,028; மாணவியர் 2,750 என, 4,778 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இது, 92.26 சதவீதம். கடந்தாண்டு தேர்ச்சி சதவீதம் 88.12 என இருந்தது. இந்தாண்டு 4.84 சதவீதம் கூடுதலாக பெற்று, மாநகராட்சி பள்ளிகள் அசத்தி யுள்ளன.

இதுகுறித்து, மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: –

பிளஸ் 2 பொதுத்தேர்வில், கடந்தாண்டை விட மாணவர்கள் அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 92.96 என்ற அளவில் உள்ளது.

### 100 சதவீதம் தேர்ச்சி!

நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சி.ஐ.டி., நகர் சென்னை மேல்நிலைப் பள்ளிகள், 100 சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளன. மாநகராட்சி பள்ளி மாணவ மாணவியர் 43 பேர், 551–600 வரை மதிப்பெண் பெற்றுள்ளனர்.

அதேபோல், 241 மாணவ, மாணவியர் 501 –550 வரையும்; 543 மாணவ, மாணவியர், 451–500 வரையும் மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

மேலும், கணினி பயன்பாடுகள் 8; கணினி அறிவியல் 10; கணக்குப் பதிவியல் 8; பொருளாதாரம் 2; வணிகக் கணிதம் 2; அடிப்படை இயந்திர பொறியியல் 2; உணவு சேவை மேலாண்மை 90; நெசவு ஆடை வடிவமைப்பு 4; தணிக்கையியல் 47 என, மொத்தம் 173 மாணவ, மாணவியர் 100க்கு, 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

மதிப்பெண் பொறுத்த வரையில், அமைந்தகரை புல்லா அவென்யூ சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி மைதிலி 600க்கு 593 மதிப்பெண் பெற்றுள்ளார்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

'கஷ்டப்பட்டு படித்தால் வெற்றி நிச்சயம்' என்பதை நிரூபிக்கும் வகையில், சலவை தொழிலாளியின் மகளான மைதிலி, மாநகராட்சி பள்ளிகளிலேயே முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

அமைந்தகரை பி.பி., கார்டன் பகுதியைச் சேர்ந்த, சலவை தொழிலாளி ஆனந்தகுமார் – சிவபாரதி தம்பதியின் மகள், மாணவி மைதிலி கூறியதாவது:

நான், 6ம் வகுப்பு முதல் இந்த பள்ளியில் தான் படித்து வருகிறேன். 10ம் வகுப்பில் 484 மதிப்பெண்; பிளஸ் 1 தேர்வில் 590 மதிப்பெண் பெற்று மாநகராட்சி அளவில் முதலிடம் பெற்றேன்.

பிளஸ் 2 தேர்விலும் சாதித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. எந்த டியூஷனுக்கும் போகவில்லை. தினமும் பள்ளியில் மாலை 06:30 மணி வரை நடந்த சிறப்பு வகுப்புகளில் மட்டுமே படித்தேன். ஆசிரியர்களின் வழிகாட்டுதலும், பெற்றோர், நண்பர்களின் ஊக்கமும் தான் என் வெற்றிக்கு காரணம். எதிர்காலத்தில் சி.ஏ., படிக்க வேண்டும் என்பது என் கனவு.

இவ்வாறு அவர் கூறினார்.

---

## தமிழ்நாடு – கேரளாவை இணைக்கும் ரயில் பாதைகளில் போதிய சேவை இல்லை!

# தென்காசி உள்ளிட்ட பல்வேறு மாவட்ட பயணிகள் மிகுந்த ஏமாற்றம்!

## மரு.ராணிஸ்ரீ குமார் எம்.பி. - இந்திய ரயில்வே வாரியத் தலைவருக்கு கோரிக்கை!

தென்காசி.மே.11-

தமிழ்நாடு மற்றும் கேரளாவை இணைக்கும் இரண்டு மிக முக்கியமான அகலப்பாதை மின்மயமாக்கப்பட்ட ரயில் பாதைகளில் போதிய ரயில் சேவைகள் இல்லாததால் தென்காசி நாடாளுமன்ற தொகுதி மற்றும் அதை ஒட்டிய மாவட்டங்களை சேர்ந்த பயணிகள் மிகுந்த கவலை மற்றும் ஏமாற்றத்தை சந்தித்து வருகின்றனர் என தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் இந்திய ரயில்வே வாரிய தலைவர் சதீஷ்குமார், தென்னக ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங், மதுரை மண்டல தெற்கு ரயில்வே மேலாளர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார்.

அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு மற்றும் கேரளாவை இணைக்கும் இரண்டு முக்கியமான அகலப்பாதை மின்மய மாக்கப்பட்ட ரயில்வே பாதைகளில் போதிய ரயில் சேவைகள் இல்லாததால் தென்காசி நாடாளுமன்ற தொகுதி மற்றும் அதனை ஒட்டியுள்ள மாவட்டங்களைச்



சேர்ந்த பயணிகள் தீவிர கவலை மற்றும் ஏமாற்றத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த வழித்தடங்களில் தெற்கு ரயில்வே போதுமான வழக்கமான ரயில்களையோ அல்லது கோடைகால சிறப்பு ரயில்களையோ அனுமதிக்கவில்லை, என்று பயணிகள் ஆழ்ந்த வேதனையில் உள்ளனர். அதேசமயம் கோடை காலங்களில் பல சிறப்பு ரயில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு முக்கியமான பயணிகள் வழித்தடங்களும் தொடர்ந்து கவனிக்கப்படாமல் இருக்கிறது.

சென்னை தாம்பரம்திருவனந்தபுரம் வழியாக செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாச்சலம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகாசி, ராஜபாளையம், சங்கரன் கோவில், கடையநல்லூர், தென்காசி, செங்கோட்டை, புனலூர், கொல்லம் வழியாக திருவனந்த புரம் வடக்கு மற்றும் சென்னைதாம்பரம் திருநெல்வேலி வழியாக செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாச்சலம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லி புத்தூர், ராஜபாளையம், சங்கரன் கோவில், கடையநல்லூர், தென்காசி, பாவூர்சத்திரம், கீழக்கடையம், திருநெல்வேலி ஆகிய இந்த இரண்டு வழித்தடங்களும் முழுமையாக மின்மய மாக்கப்பட்ட அகல இருப்புப்பாதை பிரிவுகளாகும்.

இவை தமிழ்நாட்டிற்கும் கேரளாவிற்கும் இடையில் பயணிக்கும் தினசரி பயணிகள், மாணவர்கள், பணிபுரியும் தொழில் வல்லுநர்கள், யாத்ரீகள், சுற்றுலாப் பயணிகள், வர்த்தகர்கள், சிறுவணிகர்கள் உள்ளிட்ட கணிசமான பயணிகளின் போக்குவரத்திற்கு சேவை செய்கிறது. கோடை விடுமுறையின் போது இந்த வழித்தடங்களில் பயணிகளின் தேவை கனிசமாக அதிகரிக்கிறது. இதன் விளைவாக கடுமையான நெரிசல், நீண்ட காத்திருப்பு பட்டியல்கள் மற்றும் பணிகளுக்கு கடுமையான சிரமம் ஏற்படுகிறது. மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டு பின் வரும் சேவைகளுக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்குமாறு உங்களின் கனிவான தலையீட்டை கோருகிறேன்.

கடந்த ஆண்டு வெற்றிகரமாக இயக்கப்பட்ட சிறப்பு ரயிலை போலவே கோடைகால சிறப்பு ரயில்களை அறிமுகப்படுத்த வேண்டும். பொது பயணிகள் மற்றும் புலம்பெயரும் தொழிலாளர்களின் சேவைக்காக மேற்கூறிய இரண்டு வழித்தடங்களும் சென்னை தாம்பரத்திலிருந்து முன்பதிவு இல்லாத வார இறுதி சிறப்பு ரயில்களை இயக்க வேண்டும். கோடைகால சிறப்பு ரயில்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

திருவனந்தபுரம், திருநெல்வேலி மதுரைக்கு இடையே கொல்லம், புனலூர், செங்கோட்டை, தென்காசி வழித்தடங்களில் கோடைகால சிறப்பு ரயில்கள் இயக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கோரிக்கை மனுவில் கூறியுள்ளார்.

---

## ஆம்ஆத்மி அமைச்சர் வீட்டில் ஈ.டி. சோதனை!

# மோடியின் மிரட்டலுக்கு பஞ்சாப் அடிபணியாது!

## முதல்வர் பகவந்த் மான் ஆவேசம்!

சண்டிகர், மே.11-

பஞ்சாப் மாநில அமைச்சர் சஞ்சீவ் அரோரா வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியதை முதல்வர் பகவந்த் மான் கடுமையாக விமர்சித்துள்ளார். பஞ்சாப் மாநில ஆம்ஆத்மி கட்சி அமைச்சரும், எம்.எல்.ஏ.வுமான சஞ்சீவ் அரோராவுக்குச் சொந்தமான இடங்களில், அந்நியச் செலாவணி மேலாண்மை சட்டத்தின் கீழ் கடந்த மாதமும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சஞ்சீவ் அரோரா, அவரது மகன் காவ்யா அரோரா மற்றும் இரு வர்த்தக கூட்டாளிகளுக்குச் சொந்தமான அரியானா, சண்டிகர் மற்றும் பஞ்சாப் பகுதிகளில் உள்ள இடங்களில் இந்த சோதனைகள் நடத்தப்பட்டன.

கடந்த 1 ஆண்டில் மட்டும் அமைச்சரின் வீட்டில் 3 முறை சோதனைகள் நடத்தப்பட்டுள்ள நிலையில், இன்று மீண்டும் அவரது வீட்டில் அதிகாரிகள் சோதனையைத் தொடங்கியுள்ளனர். கடந்த 30 நாட்களில் நடக்கும் 2வது சோதனை இதுவாகும். தொடர்ச்சியாக நடத்தப்படும் இந்தச் சோதனைகளில் இதுவரை எந்தவிதமான ஆதாரங்களும் அல்லது பொருட்களும் சிக்கவில்லை என பஞ்சாப் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சோதனைகள் குறித்து பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் கூறுகையில், 'பாஜக தனது அரசியல் லாபத்திற்காக அமலாக்கத்துறையைத் தவறாகப் பயன்படுத்துகிறது. பஞ்சாப் என்பது குருக்கள் வாழ்ந்த மண், அவுரங்கசீப்பால் கூட இந்த மண்ணை அடிபணிய வைக்க முடியவில்லை.

ஆங்கிலேயர்களுக்கு முன் பணியாத பகத் சிங்கின் வாரிசுகள் நாங்கள். எனவே, பிரதமர் மோடியின் மிரட்டல் வியூகங்களுக்கு பஞ்சாப் ஒருபோதும் அடிபணியாது. பாஜக மற்றும் அமலாக்கத்துறையின் இந்த நெறிமுறையற்ற கூட்டணிக்கு பஞ்சாபில் இருந்தே முடிவுரை எழுதப்படும்' என்று கொந்தளித்தார். இதற்கிடையே, ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் சஞ்சய் சிங், அமலாக்கத்துறையை பாஜகவின் கூலிப்படை என்று விமர்சித்துள்ளார். இந்தச் சோதனைகள் மூலம் பஞ்சாப் அரசின் மக்கள் பணிகளை முடக்க பிரதமர் மோடி முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.



கோடை வெப்பத்தை தணிக்கும் விதமாக திருவள்ளூர்மேற்குமாவட்டம் திருவள்ளூர் நகரத்தில் உள்ள தாலுக்கா ஆபீஸ் அருகில் மற்றும் மீரா திரையரங்கம் அருகில் திருவள்ளூர் நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து இளநீர், மோர், தர்பூசணி, வெள்ளரி, குளிர் பானங்கள் வழங்கினார்கள். உடன் நகர – ஒன்றிய செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன்,கூளூர் எம்.ராஜேந்திரன், தா.மோதிலால், நிர்வாகிகள் ப.சிட்டிபாபு, பொன்.பாண்டியன்,தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, என்.பரசுராமன், ராஜேஷ்வரி கைலாசம், இ.குப்பன், டி.என்.ஆர்.சீனிவாசன், டி.சிவாகுமார், டி.ஆர்.திலீபன், ஜி.வேலாயுதம், ஆர்.விஜயகுமார், டி.செல்வகுமார், ஜி.ஆர்.ராஜ்குமார் தாமஸ், நரேஷ்குமார்,வி.ஜான், தா.அய்யூப் அலி, நீலாவதி பன்னீர்செல்வம், அ.பவளவண்னன், ஜி.பாண்டியன், கே.ஜி.பி.கேசவன், பி.ராஜி, சொக்கலிங்கம், உலகநாதன், டொனால்ட், முரளி, உலகநாதன், தியாகு, சித்தரை, பாலகிருஷ்ணன், பாலசந்திரன், ஆர்.சசி, ராஜ்பால், சுனில், அமர்நாத் மற்றும் நகர நிர்வாகிகள் கழக நிர்வாகி பலர் உள்ளனர்.